<u>சுருக்கம்</u>

நில எடுப்பு – சென்னை மாவட்டம், மாம்பலம் – கிண்டி வட்டம், தியாகராயநகர் கிராமம், பிளாக் எண்.132, புல எண்கள்.5954 மற்றும் 5955 – 936 சதுர அடி தனியார் நிலங்களை பர்கீட் சாலை மற்றும் வெங்கட் நாராயணா சாலை சந்திக்கும் இடத்தில் பர்கீட் சாலையை அகலப்படுத்துவதற்காக – ரூ.53,46,300/– செலவில் கையகப்படுத்துதல் – தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894 பிரிவு 17 (2) ன் கீழ் நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை</u>

அரசு ஆணை (நிலை) எண்.158 நாள்: 10.08.2010

ஆடி – 25,
திருவள்ளுவர் ஆண்டு – 2041

படிக்க:

முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/19937/2009, நாள் 20.10.2009

* * * * *

<u>ஆணை:</u>

மேலே படிக்கப்பட்ட சென்னை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதத்தில் சென்னை மாவட்டம், மாம்பலம் – கிண்டி வட்டம், தியாகராயநகர் கிராமம், பிளாக் எண்.132, புல எண்கள்.5954 மற்றும் 5955 –ல் 936 சதுர அடி தனியார் நிலங்களை பர்கீட் சாலை மற்றும் வெங்கட் நாராயணா சாலை சந்திக்கும் இடத்தில் பர்கீட் சாலையை அகலப்படுத்துவதற்காக ரூ.53,46,300/– செலவில் கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் அரசின் நிர்வாக ஒப்புதல் கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் என்றும், இந்நேர்வில் நில எடுப்பு கோரியுள்ள நிலங்களை மாம்பலம்–கிண்டி வட்டாட்சியர் அவர்கள் 29.06.2009 அன்று புலத்தணிக்கை செய்துள்ளார் என்றும், மேற்படி நிலத்தில் கோயில், மரங்கள், புராதன சின்னங்கள் ஏதுமில்லை என்றும் ஒரே ஒரு சுற்றுசுவர் மட்டும் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார் எனவும், இந்நில எடுப்பிற்கான செலவினம் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான தோராய செலவினம் ரூ.53,46,300/– என கீழ்கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| (i) | புல எண்.5954 ல் உள்ள (ஒரு சதுர அடிக்கு ரூ.4000/– வீதம் ) 922 சதுர அடி நிலத்தின் மதிப்பு | ரூ.36,88,000/– |
| (ii) | புல எண்.5955 ல் உள்ள (ஒரு சதுர அடிக்கு ரூ.4,500/– வீதம் ) 14 சதுர அடி நிலத்தின் மதிப்பு | ரூ.77,000/– |
| | மொத்தம் | ரூ.37,65,000/– |
| | 30% ஆறுதல் தொகை | ரூ.11,29,500/– |
| | 12% கூடுதல் சந்தை மதிப்பு (ஒரு வருடத்திற்கு) | ரூ.4,51,800/– |
| | ஆக மொத்தம் | ரூ.53,46,300/– |

மேலும் மேற்படி நிலத்தை கையகப்படுத்த சென்னை மாநகராட்சி மன்றத்தில் தீர்மானம் எண்.529/2008, நாள் 30.09.2008 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், கையகபடுத்தப்படும் நிலங்கள் தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கவரப்படவில்லை எனவும் தெரிவித்து. மேற்படி சென்னை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாவட்டம், மாம்பலம் – கிண்டி வட்டம், தியாகராயநகர் கிராமம், பிளாக் எண்.132, புல எண்கள்.5954 மற்றும் 5955 –ல் 936 சதுர அடி தனியார் நிலங்களை பர்கீட் சாலை மற்றும் வெங்கட் நாராயணா சாலை சந்திக்கும் இடத்தில் பர்கீட் சாலையை அகலப்படுத்துவதற்காக ரூ.53,46,300/– (ரூபாய் ஐம்பத்தி மூன்று இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து முன்னூறு மட்டும்) செலவில் தமிழ்நாடு நில எடுப்பு சட்டம் 1894, பிரிவு 17 (2) ன் கீழ் சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து இதற்கான செலவினங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் கையகப்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதி, வருவாய்த் துறைகளின் இசைவுடன் அவற்றின் அ.சா.கு.எண்.68426/ந.நி.ம.கு.வ/09, நாள் 15.06.2010 மற்றும் 29170/நிநி2/10–1, நாள் 05.07.2010 ன் படி வெளியிடப்படுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3

<u>நகல்:</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதியமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு வருவாய் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்**